**சமூக பாதுகாப்பு சபை - 2022**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சமூக பாதுகாப்பு சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சமூக பாதுகாப்பு சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமானத்தேய்வு செய்து முடிவடைந்திருந்த போதும் அத்திகதி வரையிலும் பாவனையில் காணப்படுகின்ற ரூபா 47,829,179 ஆன தொலைத்தொடர்பு உபகரணங்கள், தளபாட பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதி, கணனி துணைப்பாகங்கள் மற்றும் இயந்திர பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சந்தை விலையை அடிப்படையாக கொண்டு நியாயமான பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020, 2021, 2022 என்ற ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் 19 நிலைமை மற்றும் செலவினங்கள் வரையறுக்கப்பட்டதன் காரணமாக சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் போது சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதி நியாயமான பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2018 இன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இற்கான மாற்று கணக்கீட்டு நியமத்தின் (அ) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கிடைத்த மொத்த மூலதன மானியம் ஆண்டின் பிற்போட்ட வருமானமாக கணக்கீடு செய்ய முடியுமாக இருந்த போதிலும் முன்னைய ஆண்டில் கிடைத்த மூலதன மானியத்திற்கான காலக்கழிவின் பெறுமதி மீளாய்வாண்டின் பிற்போட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் மிகை ரூபா 11,952,597 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்காக கிடைத்த மூலதன மானியம் 2018 இன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் அடிப்படை பரிந்துரையின் பிரகாரம் காலக்கழிவின் பெறுமதி மீளாய்வாண்டில் பிற்போட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வூதிய முன்மொழிவு திட்டங்களின் அங்கத்தவர்களினால் 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலத்தில் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 2,950,621 ஆன தவணைப் பணம் அங்கத்தவர்களின் தேவையினை இனங்கண்டு அந்த தனிப்பட்ட கணக்குகளில் கணக்கீடு செய்வதற்கு பதிலாக இணங்காணப்படாத வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய பங்களிப்பாளர்களை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் தேவையான தகவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வைப்புக்கள் மாத்திரம் கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்க வங்கிக்கு அறிவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | வைப்பு மீதிகளை இனங்கண்டு அங்கத்தவர்களின் கணக்குகளுக்கு செலவு வைத்தல் வேண்டும். |
| (ஆ) | 179 இருப்பு விடயங்களுக்குரிய கூட்டுப் பெறுமதி ரூபா 7,907,995 ஆன இறுதி இருப்பு மீதியில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 27 இருப்பு விடயங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு ஒதுக்கங்கள் மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது அதற்குரியவைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத விடயங்கள் ஒதுக்கப்படல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 381 | சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக 04 வங்கி நடைமுறைக் கணக்குகள் மற்றும் 03 சேமிப்புக் கணக்குகள் 2003-2021 காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 | எதிர்காலத்தில் உரிய அங்கீகாரம் பொதுத் திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை சட்டம் 15(2) ஆம் பிரிவு | ஏதாவது பங்களிப்பாளருக்கு நலன்கள் இழக்கப்படும் போது சபையினால் அந்த பங்களிப்பாளர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அங்கத்தவர்களின் தகவல்களை உள்ளடக்கிய தரவுகளை சரியான முறையில் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 683,903 ஆன செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட பங்களிப்பாளர்களுக்கு நலன்கள் இழக்கப்பட்டுள்ளமை தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. | முறைமையை தயாரிக்கும் வரை ஒவ்வொரு அங்கத்தவரினதும் கணக்குகளை பரீட்சித்து செயற்பாடற்றவைகளை அறிவிப்பதற்கு முறைமையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சமூக பாதுகாப்பு சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1999 இன் 33 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை (திருத்தப்பட்ட) சட்டம் 22 ஆம் பிரிவு | சபைக்கு மிகவும் அவசியமற்ற சபையின் நிதியத்தில் உள்ள சகல நிதியும் அமைச்சரினால் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் அதிகாரம் வழங்கப்படுகின்ற ஏதோ ஒரு முறையில் அவ்வாறு அதிகாரம் வழங்கப்படுகின்ற சேமிப்பு பத்திரங்களில் முதலீடு | சபையின் சகல நிதியமும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2011.11.14 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றிக்கையின் பிரகாரம் அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்பாக முதலீடு செய்யப்படுகின்றது. | சமூக பாதுகாப்பு சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செய்யப்படுகின்ற போதிலும் கூட்டுப்பெறுமதி ரூபா 2,536,179,200 ஆன முதலீட்டுக்காக அவ்வாறு இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 419,422 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,594,481 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,175,059 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆண்டின் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்ட முறைமைக்கு புதிய மென்பொருள் முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டு அதற்காக 12,511,000 ஆக நிதியேற்பாடு திறைசேரியில் இருந்து பெறப்பட்டுள்ளதுடன் 2018 திசெம்பர் 06 ஆந் திகதி உரிய நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. பின்னர் 2019 பெப்ரவரி 14 ஆந் திகதி முதலாவது வழங்கல் தொகுதிக்குரிய 10 சதவீத கொடுப்பனவாக ரூபா 1,009,250 செலுத்தப்பட்டிருந்தது. இரு தரப்பினராலும் அவ்வப்போது வேறுபாடுகள் திருத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 வருட காலம் கடந்திருந்த போதும் இந்த கணனி முறைமை | காணப்படுகின்ற உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கும், புதிய கணனி முறைமையை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முன்மொழிவு திட்டங்களின் செயல் நடவடிக்கைகளை முறையானதாக பேணிச் செல்வதற்கு கணனி முறைமை ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஸ்தாபிக்கப்படாமையால் சபையின் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முன்மொழிவு திட்டங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளை முறையானதாக பேணிச் செல்வதற்கு முடியாதிருந்ததுடன் அந்த பணம் குறுங்கால வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ஓய்வூதிய முன்மொழிவு திட்டத்தின் கீழ் அங்கத்துவத்தை பெற்றிருந்த 879,969 அங்கத்தவர்களுக்கிடையே செயற்பாடற்ற 683,903 அங்கத்தவர்களுக்கு செயற்படு நிலைக்கு கொண்டு வரும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்னைய ஆண்டின் போது கிடைத்த ரூபா 2.2 மில்லியன் ஆன அரசாங்கத்தின் நிதியேற்பாடுகளில் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 778,000 தொகையில் செயற்பாட்டு செலவினமாக ரூபா 40,000 செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடற்ற 5,000 அங்கத்தவர்களை செயற்பாடுள்ள நிலைக்கு கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 1,462,576 செலவிடப்பட்டு 217 அங்கத்தவர்கள் மாத்திரம் செயற்படு நிலைக்கு கொண்டு வரப்பட்டிருந்தனர். | மொத்த செயற்திட்டத்தின் கீழ் இதுவரையில் 347 பேர் மீண்டும் செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்கும், 40,628 பேர்களுக்காக செயலிழந்த நிலைமையை அறிவித்து கடிதம் அனுப்புவதற்கும், எதிர்காலத்தில் அந்த நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்பாடற்ற அங்கத்தவர்களை செயற்படும் நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அங்கத்துவம் செயலிழந்தமை அல்லது அங்கத்துவத்தை இரத்துச் செய்ததன் அடிப்படையில் 25 சதவீதம் அல்லது அதற்கு மேல் | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகள் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் | பங்களிப்பை தொடர்ச்சியாக பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தவணைப் பணம் செலுத்திய 8,720 அங்கத்தவர்களுக்கு 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலத்தில் தவணைப் பணம் ரூபா 212,120,573 மீளப் பெறப்பட்டிருந்தது. அந்த பங்களிப்பாளர்கள் விலகிச் செல்வதற்கு பதிலாக பங்களிப்பை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்காக ஏற்பாடுகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்களை அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்ததுடன் வருடாந்தம் பங்களிப்பாளர்களில் கணிசமான அளவினர் அங்கத்துவத்தில் இருந்து விலகிச் சென்று பணத்தினை மீளப் பெற்றுக்கொள்ளும் போக்கு காணப்பட்டது. | பொருளாதார நெருக்கடியின் காரணமாக அங்கத்தவர்கள் தமது பங்களிப்பு பணத்தை பெற்றுக்கொள்வதற்காக கோரிக்கையிடும் போக்கும் அதிகரித்திருந்தது. எனினும் அவ்வாறு பங்களிப்பாளர்கள் விலகிச் செல்வதற்கு பதிலாக பங்களிப்பை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது. | |
| (ஈ) | ஓய்வூதியம் மற்றும் 07 நலன் திட்டங்கள் முதலாவதாக சபையினால் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தலின் நலிவின் காரணமாக மீளாய்வாண்டு வரையில் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்ட சேமிப்பு மற்றும் பாதுகாப்பு என்ற 02 ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டங்கள் மாத்திரம் ஆகும். அந்த 02 முன்மொழிவு திட்டங்களுக்காக 460,800 அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் செயற்படு நிலையில் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை 123,295 அதாவது 27 சதவீதம் ஆகும். உரித்துக்களின் பிரகாரம் நலன்கள் இழக்கப்பட்ட போதும் மற்றும் | 04 உத்தேச திட்டங்கள் நிறைபெறாததன் அடிப்படையில் அந்த உத்தேச திட்டங்களுக்காக புதிய அங்கத்தவர்களை சேர்த்தல் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் நிறுத்தப்பட்டிருந்ததுடன் சேர்க்கப்பட்ட அங்கத்தவர்களுக்கான நலன்களை வழங்குதல் தொடர்ச்சியாக உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. | நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தவணைப் பணம் செலுத்தாமல் புறக்கணித்த பங்களிப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக பெற்றுக்கொள்ளாமையின் அடிப்படையில் அந்த நபர்களுக்கு முன்னைய ஆண்டின் போது செயற்படறற் நிலைக்கு உட்பட்ட பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்த நிலையில் அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த நிலைமையை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை சபை எடுத்திருக்கவில்லை.

### 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலைமை அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக சபையின் நிதியத்தில் இருந்து ரூபா 195 மில்லியன் செலுத்தி இராஜகிரியவில் உள்ள கட்டிடம் 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பெறுகைகள் முறைமையை பின்பற்றாமல் ரூபா 165 மில்லியன் ஆன அரசாங்கத்தின் மதிப்பீட்டு பெறுமதியை விஞ்சி அதிக விலையில் ஆதனம் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக சபைக்கு ரூபா 30 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் 10 வருட காலத்தை விஞ்சியிருந்த போதிலும் அதற்கு பொறுப்பான தரப்பினரிடம் இருந்து நட்டம் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | விசாரணைகளை மேற்கொள்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த விசாரணை அறிக்கை பணிப்பாளர் சபை கூட்டத்திற்காக 2023.05.10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர் சபையின் ஆலோசனை மற்றும் சட்ட ஆலோசனைகளை பெற்று அதன் பிரகாரம் வழக்கினை தொடர்வதற்கு சட்டமா அதிபருக்கு கையளிப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. | பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை நிறைவேற்றி நட்டத்தை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |